DEPOSITION OF WITNESS
(Chapter XXII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE,
KRISHNAGIRI.

| | | |
|---|---|---|
| Sessions | : | SC. No. 111 of 2021 |
| Deposition of witness for | : | PW11 |
| Name | : | பிரசன்ன பாலாஜி |
| Father's Name | : | Selvam |
| Village | : | A. Jettihalli |
| Taluk | : | Dharmapuri |
| District | : | Dharmapuri |
| Profession | : | Doctor |
| Age | : | 35 years |

Solemnly affirmed in accordance with the provisions of Act 44 of 1969 of the 29th day of October 2025.

எதிரிகள் ஆஜர். சாட்சி ஆஜர். சாட்சி சத்திய பிரமாணத்தின் பெயரில் விசாரிக்கப்பட்டார்.

முதல் விசாரணை :–

நான் தற்போது சிதம்பரத்தில் உள்ள கடலூர் மாவட்ட அரசு மருத்துவக்கல்லூரியில் போதகராக பணிபுரிந்து வருகிறேன். நான் கடந்த 08.11.2019 அன்று கிருஷ்ணகிரி அரசு மாவட்ட தலைமை மருத்துவமனையில் பணிபுரிந்து கொண்டிருக்கும் போது, அன்று மதியம் 02.45 மணியளவில் கிருஷ்ணன், வயது 66, த/பெ.வெங்கடேஷ் நாயுடு, மகாராஜா கடைரோடு, கொத்திநாயனப்பள்ளி, கிருஷ்ணகிரி என்பவர் தன்னுடன் ராஜ்குமார் என்பவரை அழைத்துக் கொண்டு வந்து 08.11.2019 அன்று மதியம் 12.45 மணியளவில் நாரணப்பள்ளி சாலை, கோனேக்காவனூர் அருகே தன்னை அடையாளம் தெரியாத நான்கு நபர்கள் மரக்கட்டை, கத்தி மற்றும் அரிவாளால் தாக்கியதாக கூறினார். மேலும் அவருக்கு வலது தோள்பட்டை மற்றும் உடல் முழுவதும் வலி இருப்பதாக கூறினார். அவரை பரிசோதனை செய்ததில் அவருக்கு கீழ்க்கண்ட காயம் காணப்பட்டது.

1.தலையின் இடது பக்கத்தில் 6X1X0.5 செ.மீ. அளவில் கிழிந்த காயம் காணப்பட்டது.

2. முகத்தின் அருகே சிராய்ப்பு காயங்கள் காணப்பட்டது.

அவரை உள்நோயாளியாக அனுமதித்து தலைக்கு CT Scan மற்றும் எலும்பு அறுவை சிகிச்சை நிபுணர் பார்வைக்கு பரிந்துரை செய்தேன். மேலும் 22.11.2019 அன்று மேற்கூறிய காயங்களான 1 மற்றும் 2 சாதாரண காயம் என சான்றளித்தேன். இது குறித்து நான் காயச்சான்று வழங்கினேன். அந்த காயச்சான்று **அ.சா.ஆ.9** ஆக குறியீடு செய்யப்படுகிறது. இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தனர்.

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை :–</u>

அடையாளம் தெரியாத நான்கு நபர்கள் என்று தான் சொல்லி உள்ளார்கள் என்றால் சரிதான். வயது எதுவும் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். அதன் பிறகு போலீசார் என்னை விசாரித்த போது எதிரிகளின் வயது 161 வாக்குமூலத்தில் சொல்லி இருந்தால் அது தவறு என்றால் சரிதான். மரக்கட்டை, கத்தி, அரிவாள் ஆகிய ஆயுதங்களை என்னிடம் காட்டவில்லை என்றால் சரிதான். மேற்படி காயங்கள் வண்டியில் வேகமாக சென்று கீழே விழுந்தால் ஏற்பட வாய்ப்புள்ளது என்றால் சரிதான்.

<u>மறு விசாரணை :–</u>

இல்லை.

M SANTHI
CHIEF JUDICIAL MAGISTRATE,KRISHNAGIRI
Digitally signed by M SANTHI

தலைமை குற்றவியல் நடுவர்,
கிருஷ்ணகிரி.